
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 11 ஆகஸ்டு - 1998 இதழ் - 8




வெளியிடுவோர்

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30-11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00-12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30-6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15-8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00-9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே


1. "காயு" 1

2. நீங்கள் கர்த்தருக்கு முக்கியமானவர் 9

3. எப்படி ஆராதிப்பதென்பது கூட நமக்குத் தெரியவில்லை 13

4. உண்மையான மனந்திரும்புதல் 19

5. "நாகூம்" தீர்க்கனின் புத்தகம் 22

7 ஆவியின் கனி 23

6. தோல்வி என்பது முடிவானதல்ல 27

7. எபேசி 5 : 23" கிறிஸ்துவே சபைக்கு தலையாயிருக்கிறார் 28

8 தேவனுடைய பெட்டியைப் பற்றிய கட்டளை 31

// THIRUMARAI AASAAN

Editor
S. RAJANAYAGAM

Honorary Editor
J.C.CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 11 AUGUST-1998 Issue - 8

ஆசிரியவுரை

# "காயு"

இப்படியொரு வார்த்தை வேதாகமத்தில் இருக்கிறதா என்று யோசிக்கிறீர்களா? ஒரு நபரின் பெயராக இருக்குமா அல்லது ஒரு இடத்தின் பெயராக இருக்குமா என்று எண்ணுகிறீர்களா? ஒருவேளை, வேதாகமத்திற்கு வெளியே சென்று விட்ட மாதிரி தெரிகிறதா? இல்லை. வேதாகமத்தை விட்டு வெளியே போகும் எண்ணம் ஒருபோதும் இல்லை. உன்னத தேவனின், அநந்த ஞானத்தின்படியான பரிசுத்த வேத எழுத்துக்களில் உள்ளவைகளையே பேசி முடிப்பதற்குக் காலம் போதாமலிருக்கும் போது, வேதாகமத்தை விட்டு வெளியே எங்கே போவது? ஆகவே, நம்முடைய தலைப்பு வேதாகமத்தில் உள்ளது தான் என்பதால், நம்பிக்கையோடு மேலும் தொடருங்கள்.

அநியாயம் இழைக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு காட்ட வேண்டுமென்ற ஆதங்கம் எப்பொழுதுமே எனக்கு உண்டு. இந்த ஆதங்கத்தின் தாக்கத்தால், கடந்த சில வருடங்களின் ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதங்களில், பரிசுத்த ஆவியானவரால் மெச்சப்பட்டிருந்தும், நம்மால் ஒதுக்கப்பட்ட சில மாமனிதர்களை, வேதாகமத்தின் பக்கங்களிலிருந்து வெளியே கொண்டு வந்து, உங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தேன். கிட்டத்தட்ட அவர்களனைவரும் உங்களுடைய ஏகோபித்த வரவேற்பைப் பெற்றனர். அவர்களிடமிருந்து சில அவசியமான பாடங்களை நமது ஆன்மீக வாழ்க்கைக்குப் பெற்றுக் கொண்டோம். அவர்கள் இராஜாக்களின்

நாட்களில் வாழ்ந்த மாவீரன் "சம்மா", இயேசுவின் நாட்களில் வாழ்ந்த விழியிழந்த "பார்திமேயு", பவுலுடைய நாட்களில் வாழ்ந்த "ஒநேசிப்போரு" மற்றும் முதலாம் நூற்றாண்டில் இருந்த "**சீகார்என்னும் ஊரார்.**"

இவர்களின் இவ்வரிசையில் இடம் பெற்று, இவ்வருடம் நமக்கு அறிமுகமாகி, உடனே ஆசானாகவும் மாறி, நமக்குப் பாடம் கற்றுத் தர ஆயத்தமாக இருப்பவர் தான், இம்மாத தலைப்பை அலங்கரிக்கும் "**காயு**" ஆவார்.

வேதாகமத்தைப் படிக்கும் நாம் இவரைப் போன்றவர்களையெல்லாம் வெகு சாமத்தியமாக ஒதுக்கி விடுகிறோம். இவர்களெல்லாம் நமக்கு ஒரு பொருட்டாகவே தெரிவதில்லை. சரி, நமது பிரசங்கிகளாவது இவர்களின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவார்களா என்று கவனித்தால் அவர்களும் இத்தேவ தாசர்களை அலட்சியம் செய்து விடுகின்றனர். பரவாயில்லை, நாமாகிலும் முயன்று இவர்களை அடையாளம் கண்டு கொள்வோம்.

சரி, காயுவைக் கண்டு கொள்வதற்கு முன்பாக, இவனின் பின்னணி பற்றிக் கொஞ்சம் பார்ப்போம். "காயு" என்பது அந்நாட்களில் ஒரு பொதுவான பெயர். இப்பெயரையுடைய நான்கு பேரை நாம் புதிய ஏற்பாட்டில் காண முடியும். (அப். 19 : 29, 20 : 4, ரோம. 16 : 23 மற்றும் Iகொரி 1 : 14). நம்மவர், இந்த நால்வரில் ஒருவரா என்பது நமக்குத் தெரியாது. நம்மவர், அப்போஸ்தலன் யோவானின் மூன்றாம் நிருபத்தில் இடம் பெற்றுள்ளார். நிருபத்தில் நம்மவரா அல்லது நம்மவரில் நிருபமா என்று கவனித்தால், இரண்டாவது தான் சரியானது. இந்த முடிவு நிச்சயமாக மிகையானதல்ல.

யோவானின் மூன்றாம் நிருபம், முதல் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் எழுதப்பட்டது. எபேசு பட்டணத்திலிருந்து எழுதப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஆனால், எந்த ஊரில் இருந்த சபைக்கு " எழுதப்பட்டதென்று என்று தெரியவில்லை. இருப்பினும், யோவானுடைய அப்போஸ்தலத்துவத்தால் பயன்பெற்ற ஒரு சபையென்றும், அவனுக்கு கடன்பட்டிருக்கிற ஒரு சபையென்றும் தெரிகிறது. இந்த சபையில் விசுவாசமுள்ள ஒரு கூட்டமும், விசுவாசியாத ஒரு கூட்டமும் இருந்துள்ளது. இந்தப் பின்னணியில் ஒரு விசேஷித்த நோக்கத்தோடு இந்நிருபம் எழுதப் பட்டுள்ளது. இப்படிப்பட்ட இந்நிருபத்தில் தான் நம்மவரின் விசுவாசம், நம்பிக்கை, விருந்தோம்பல் ஆகியன மெச்சப்பட்டு, அவைகளில் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டுமென வலியுறுத்தி எழுதப்பட்டுள்ளது.

பரிசுத்த ஆவியானவர், யோவான் அப்போஸ்தலனைக் கொண்டு, நமது "காயு" பற்றி மிகச் சிறந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளார். அவைகளைக் கொஞ்சம் உற்றுப் பார்த்து நாம் நமக்கு பயன்படுத்துவோம்.

## I. காயு "பிரியமானவனாக" இருந்துள்ளான்

யோவான் எழுதின மூன்றாம் நிருபம் இவ்விதமாகத் துவங்குகிறது. "மூப்பனாகிய நான் சத்தியத்தின்படி நேசிக்கிற பிரியமான காயுவுக்கு எழுதுகிறதாவது" (வச. 1). பதினான்கே வசனங்கள் கொண்ட ஒரு புத்தகத்தில், "**பிரியமானவன்**" என்ற வார்த்தை நான்கு முறை இடம் பெற்றுள்ளது. இந்த வார்த்தையை அப்போஸ்தலன் யோவான் தனக்கிருந்த நெருக்கத்தின் காரணமாக பயன்படுத்தினார் என்பதைவிட, காயுவுக்கிருந்த தகுதியின் காரணமாக, பரிசுத்த ஆவியானவர் இவ்வார்த்தைகளை ஏவினார் என்பது தான் உண்மை. பரிசுத்த ஆவியானவர் தேவத்துவத்தில் ஒருவர். அவருக்குப் பிரியமானவராக வாழ்ந்துள்ளபடியால், "**காயு**" எவ்வளவு நல்லவராக, சிறந்தவராக, தேர்ந்த கிறிஸ்தவராக வாழ்ந்துள்ளார் என்பதை நாம் விளங்கிக் கொள்ளலாம்.

அப்போஸ்தலன் பவுல், விசுவாசத்தில் தான் பெற்றிருந்த குமாரர்களாகிய தீமோத்தேயுவுக்கும், தீத்துவுக்கும் இதைவிட நீண்ட நிருபங்களை எழுதியுள்ளார். அவைகளில், பிரியமானவன் என்ற வார்த்தைகளை அதிகம் காணோம். பவுலடியாருக்கும், இந்த இரு உத்தமர்களுக்கும் இருந்த உறவையோ அல்லது அவர்களின் விசுவாச உண்மையையோ இங்கே குறைத்து மதிப்பிடவில்லை. மாறாக, காயுவுடைய மேன்மையைக் கவனிக்கத் தவறிவிடாதீர்கள் என்று தான் முன்றாடுகிறேன்.

அன்பானவர்களே, நாம் யாருக்குப் பிரியமானவர்களாக வாழ்ந்து கொண்டுள்ளோம்? அப்போஸ்தலன் பவுல் கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தில், ஒரு உண்மையை வெளிப்படுத்தியுள்ளார். நமக்கு அது கசப்பானதுதான். இருப்பினும் கவனியுங்கள். "**விவாகம் பண்ணினவன் தன் மனைவிக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, உலகத்திற் குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறான் ... விவாகம் பண்ணினவள், தன் புருஷனுக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று உலக்கத்திற் குரியவைகளுக்காகக் கவலைப்படுகிறாள்**" (I கொரி. 7: 33,34). இன்றைய சமுதாயத்தின் யதார்த்த நிலை இது தான். இந்த நிலை பரிணாம வளர்ச்சி பெற்று, பிள்ளைகள் பெற்றோருக்குப் பிரியமாகவும், பெற்றோர் பிள்ளைகளுக்குப் பிரியமாகவும், ஊழியர் சபையாருக்குப் பிரியமாகவும்,

சபையார் ஊழியருக்குப் பிரியமாகவும் நடந்து கொள்ள வேண்டுமென்ற எல்லையைத் தொட்டுள்ளது.

ஒரு வேளை கணவனும், மனைவியும், பிள்ளைகளும், பெற்றோரும், சபையாரும், ஊழியரும் தேவனுக்கு விரோதமாக எப்படி நடந்தாலும் அது பற்றிக் கவலைப் படத் தேவையில்லை என்ற எண்ணம் எழுந்துவிட்டது. ஆரோக்கியமான ஆன்மீக வளர்ச்சிக்கு, இந்த அவல நிலை அடியோடு மாறவேண்டும்.

ஆகவே, பிரியமானவர்களே, பிரியமான காயுவைப் போல நாம் ஒவ்வொருவரும் தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும், பரிசுத்த ஆவியானவருக்கும் பிரியமாய் வாழ முடிவு செய்வோம். காயுவின் வழி நடப்போம்.

## II. "சத்தியத்தில்" நடந்து கொண்டான்

இரண்டாவதாக, காயு சத்தியத்தில் நடந்து கொண்டான் என்று வேதம் கூறுகிறது. "சகோதரர் வந்து, நீ சத்தியத்தில் நடந்து கொள்ளுகிறாய் தெளிவு என்று உன்னுடைய உண்மையைக் குறித்துச் சாட்சி கொடுத்தபோது மிகவும் சந்தோஷப்பட்டேன்" (வச. 3) என்று.

இந்த சிறிய புத்தகத்தில் யோவான் பயன்படுத்துகிற வேறொரு முக்கியமான வார்த்தை தான் "**சத்தியம்**" என்பது. மற்ற எல்லா அப்போஸ்தலரைக் காட்டிலும், மற்ற வேத எழுத்தாளர்களைக் காட்டிலும் யோவான் இவ்வார்த்தையை தனது நூல்களில் அதிகம் பயன்படுத்தியுள்ளார். பரிசுத்த ஆவியானவருக்கு காயு பிரியமானவனாக இருந்துள்ளது போல், யோவானுக்கு இவ்வார்த்தை பிரியமாய் இருந்துள்ளது. சிறப்புமிக்க இவ்வார்த்தை பதினான்கே வசனங்களைக் கொண்ட புத்தகத்தில் ஐந்து முறை இடம் பெற்றுள்ளது.

காயு, சத்தியவான் என்று சொல்லும் மூன்றாம் வசனத்தில் உள்ள வேறொரு வார்த்தை, "**நடந்து கொள்ளுகிறாய்**" என்பது. நன்றாக கவனியுங்கள். அவன் சத்தியத்தில் "நடந்து கொள்கிறான்" என்று சொல்கிறது. அதாவது, சத்தியத்தை ஏற்றுக் கொண்ட நாள் முதற்கொண்டு, தொடர்ந்து அந்த சத்தியத்தின்படியாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறாய் என்று கூறியுள்ளார். எபிரேயர் 11-ம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள விசுவாசிகளின் பட்டியலை. நாம் ஆழ்ந்து நோக்கினால், அவர்களில் கூட அநேகர், தங்களின் சத்திய வாழ்க்கையில் விழுந்து எழுந்திருக்கும்போது, இவன் தள்ளாட்டத்திற்கே இடமில்லாத ஒரு வாழ்க்கை வாழ்ந்துள்ளான்.

சத்தியம் என்றால் என்ன என்பதற்கு, தனது நற்செய்தி நூலில் விளக்கம் கொடுத்துள்ளார். "**உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும், உம்முடைய வசனமே சத்தியம்**" (யோவா. 17 : 17). அதாவது, காயு சத்தியத்தின்படி வாழ்ந்துள்ளான் என்பதும், வசனத்தின்படி வாழ்ந்துள்ளான் என்பதும் ஒன்றுதான். வசனத்தின்படி வாழ்வது மிகவும் கடினம் என்று கருதப்பட்ட நாட்களில் இவன் வசனத்தின்படி வாழ்ந்துள்ளான். ஆம், முதலாம் நூற்றாண்டின் இறுதிக் காலம், விசுவாசத்திற்கெதிராக பிசாசு கொடுங்கோலாட்சி நடத்தின காலம். கள்ளப் போதகங்கள் தலைவிரித்தாடிய காலம். கள்ளத் தீர்க்கதரிசிகள் வெற்றி நடை போட்ட காலம். கணிசமான கிறிஸ்தவர்கள் விசுவாசத்தை விட்டுப் பின் வாங்கிப் போய்க் கொண்டிருந்த காலம். இந்தக் கால கட்டத்தில் தான் "காயு" சத்தியத்தின்படி நடக்கிறான் என்று சகோதரர்கள் மூலமாக செய்திமேல் செய்தி யோவானுக்கு வந்து சேர்ந்து, அளவற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது.

நான் ஏற்கனவே சொன்னது போல், இந்தக் கால கட்டம் மோசமான ஒன்றாக இருந்தபடியால் தான், யூதா அப்போஸ்தலன் தான் எழுதின நிருபத்தில் இவ்விதம் கூறியுள்ளார். "பிரியமானவர்களே, பொதுவான இரட்சிப்பைக் குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில், பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை **ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது**" என்று (யூதா. 3). யூதா குறிப்பிடுவது போல், அந்த நாளில் விசுவாசத்திற்காக தைரியமாய்ப் போராடாவிட்டால் விசுவாசத்தைக் காத்துக் கொள்ள முடியாது. அப்படியானால், இந்தக் காயு விசுவாசத்தில், சத்தியத்தில் எவ்வளவு உறுதியாயிருந்துள்ளான் என்பது தெளிவாகிறது.

இங்கே, வேறொன்றையும் குறிப்பிட வேண்டும். சத்தியத்திற்கும், கிறிஸ்தவனுக்கும் உள்ள தொடர்பை நாம் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். **கிறிஸ்தவனாகிறதற்கு முன், கிறிஸ்தவனாகிறதற்குப் பின் என்று**. அதாவது, ஒருவன் கிறிஸ்தவனாகிறதற்கு முன், தான் கிறிஸ்தவனாவதற்கு **என்ன செய்ய வேண்டுமென்று வேத வசனங்கள் சொல்லுகிறதோ அதன்படியெல்லாம் செய்ய வேண்டும்**. இன்னும் குறிப்பாகச் சொல்வதென்றால் விசுவாசித்து (மாற். 16 : 16), மனந்திரும்பி (அப். 2 : 38) அறிக்கை செய்து (ரோம. 10 : 10), பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று (அப். 22:17) கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட வேண்டும், இந்தப் படிகளை ஒருவன் தாண்டி வந்தால் தான் "**கிறிஸ்தவன்**" என்ற உன்னத நிலையை

அடைகிறான். இதன் பின்பு, ஒருவன் எப்படி கிறிஸ்தவனாக வாழ வேண்டுமென்று வேத வசனங்கள் சொல்லுகிறதோ அதன்படி வாழவேண்டும். இறுதி மூச்சு வரை வாழவேண்டும். சத்தியத்தின்படி நடப்பதென்பதின் பொருள் இது தான்.

காயு, இந்த அடிப்படையில் தான் சத்தியத்தின்படி நடந்துள்ளான். நாமும் காயுவைப் போல் சத்தியத்திலே நடக்க தீர்மானிப்போம்.

## III. காயு "சகோதரருக்கும், அந்நியருக்கும் செய்த உதவிகளை உண்மையாய்ச் செய்தான்" (வ.5).

அந்நியரை உபசரிப்பதும், அந்நியர்களுக்கு உதவி செய்வதும் தேவனுக்குப் பிரியமானது. இப்படிச் செய்யும்படி தேவன் கட்டளை கொடுத்துள்ளார். இரண்டு ஏற்பாடுகளிலும் இது இடம் பெற்றுள்ளது. மோசேயின் பிரமாணம் இப்படிச் சொல்கிறது. "**உங்களிடத்தில் வாசம் பண்ணுகிற அந்நியனைச் சுதேசி போல எண்ணி, நீங்கள் உங்களில் அன்பு கூருகிறது போல அவனிலும் அன்பு கூருவீர்களாக; நீங்களும் எகிப்து தேசத்தில் அந்நியராயிருந்தீர்களே நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்**" (லேவி. 19 : 34). இதே கட்டளை புதிய ஏற்பாட்டில் ரோமர் நிருபத்திலும், எபிரேயர் நிருபத்திலும் இடம் பெற்றுள்ளது. "அந்நியரை உபசரிக்க நாடுங்கள்" (ரோம. 12 : 13). "அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்" (எபி. 13 : 2) என்று.

தேவனால் கொடுக்கப்பட்டுள்ள இக்கட்டளையை சிறப்புற நிறைவேற்றுவதில், இன்றைய கிறிஸ்தவ சமுதாயம் போதுமான சிரத்தையெடுத்துக் கொள்வதில்லை. தங்களை மெய்க் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்பவர்களும் இதில் பெலவீனமுள்ளவர்களாகவே உள்ளனர். ஆனால், இந்தக் காயுவோ, **சகோதரருக்கும், அந்நியருக்கும்** உதவி செய்வதில் வல்லவனாக இருந்துள்ளான். அதுவும் எப்படி? செய்த அனைத்தையும் **உண்மையாய்ச் செய்துள்ளான்.** இங்கே, அந்நியர் என்றால், தனிப்பட்ட முறையில் தனக்கு அறிமுகமாகாத சகோதரர்களைக் குறிக்கும்.

அந்நாட்களில் ஊழியத்தை மேற்கொண்ட சகோதரர்களுக்கு இப்படிப்பட்ட உதவி அவசியம். ஏனெனில், போக்குவரத்து வசதியோ, தங்குமிட வசதியோ, உணவு விடுதி போன்றவைகளோ இல்லை. ஆகவே, ஆங்காங்கே இருந்த விசுவாசமுள்ள சகோதரர்கள் தான், ஊழியம் செய்யும் சகோதரர்களைத் தாங்க வேண்டியிருந்தது. ஒருவேளை இப்படிப்பட்ட சகோதரர்கள் இல்லாவிட்டால் அந்நாட்களில் ஊழியம் செய்திருக்க

முடியாது. "**உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்ககும் சுவிசேஷதத்தைப் பிரசங்கியுங்கள்**" என்ற நமதாண்டவரின் பிரதான கட்டளையை நிறைவேற்றியிருக்க முடியாது.

ஆக, காயு, தனது உதவும் கரத்தால், உபசரிக்கும் பண்பால், ஊழியம் தழைக்கவும், பிரதான கட்டளை நிறைவேற்றப்படவும் உதவி செய்துள்ளான். உபசரிப்பதால், ஆசீர்வாதம் நமக்கு கிடைக்கும். ஆதியாகமம் பத்தொன்பதாம் அதிகாரத்தில், லோத்துவின் உபசரிப்பை நாம் காணமுடியும் (*19 : 1-3*). உபசரித்த பிறகு தான், அவர்கள் தேவதூதர்கள் என்று கண்டு கொண்டான். தன்னைக் காப்பாற்ற வந்தவர்கள் என்று அதன் பிறகே அறிந்து கொண்டான்.

சகோதரர்களுக்கும், அந்நியருக்கும் உதவி செய்கிற காரியத்தில் நம்முடைய நிலை எப்படியுள்ளது? சுத்த சுவிசேஷம் உலகெங்கும் பரவ நாம் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். ஊழியத்தைச் செய்கிறவர்கள் சோர்வில்லாமல் தங்கள் வேலையைச் செய்ய நாம் உதவ வேண்டும். கடைசிக்கு, இப்படிச் செய்வது நமக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வரக் கூடியதாக உள்ளதால், அதற்காகவாகிலும் நாம் இதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இந்த விஷயத்தில் காயு நமக்கு மிகச் சிறந்த முன்னோடியாக உள்ளான். ஆகவே, நாம் காயுவின் வழி நடப்போம்.

## IV. காயு, சபைக்கு "சாட்சியாக" இருந்துள்ளான்

இறுதியாக, இந்தக் காயுவிடமிருந்து நாம் கற்றுக் கொள்வது, அவனின் சாட்சியான வாழ்க்கை. யோவானுடைய மூன்றாம் நிருபத்தின் ஆறாம் வசனம், இவ்விதம் கூறுகிறது. "**அவர்கள் உன்னுடைய அன்பைக் குறித்துச் சபைக்கு முன்பாகச் சாட்சி சொன்னார்கள் ...**"

சாட்சியான வாழ்க்கையென்பது சாதாரணமானதல்ல. சாட்சி என்பது மற்றவர்கள் நம்மைக் குறித்துச் சொல்வது. ஆனால், இந்த வார்த்தை மத உலகில் மிகவும் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. தங்களைப் பற்றித் தாங்களே கதை அளந்து விட்டு அதைச் சாட்சி என்கிறார்கள். தங்களைப் பற்றிய பெருமைகளை சாட்சி என்ற பெயரால் வெளியிடுகின்றனர். இயேசு ஆண்டவர், சாட்சியைக் குறித்து என்ன சொன்னார் என்று கவனியுங்கள். "**என்னைக் குறித்து நானே சாட்சிக் கொடுத்தால், என் சாட்சி மெய்யாயிராது**" **(யோவா. 5 : 31) என்று.**

இங்கே, காயுவைக் குறித்து ஊழியச் சகோதரர்கள் யோவானுக்கு சாட்சி கொடுத்துள்ளனர். இவனைப் பற்றி சபைக்கும் சாட்சி கொடுத்துள்ளனர். இதன் மூலம் இவன் அநேகருக்குச் சாட்சியாக, முன் மாதிரியாக இருந்துள்ளான். ஒருவேளை, அப்பொழுது, யோவான் இருந்த சபையாகிய எபேசு பட்டணத்து சபைக்கு மாத்திரமல்ல, இந்த ஊழியச் சகோதரர்கள் ஊழியத்தினிமித்தமாக எங்கெல்லாம் சென்றார்களோ அங்கெல்லாம் சாட்சி கொடுத்திருப்பார்கள்.

அன்பர்களே, நம்முடைய சாட்சி எப்படியுள்ளது? நம்மை அறிந்தவர்களுக்கும், நம்முடைய சமுதாயத்திற்கும் சாட்சியாக நாம் ஜீவித்துக் கொண்டுள்ளோமா? கொஞ்சம் சிந்திப்போம். சாட்சி எவ்வளவு அவசியம் என்பதை அப்போஸ்தலன் பவுல் இளைஞனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதின நிருபத்தில் அழகாகக் கூறியுள்ளார். "**உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு** (I தீமோ. 4 : 12) என்று.

சரி, கட்டுரையின் ஆரம்பத்தில் நான் சொன்னது போல், இந்தக் காயு, நம்மால் புறக்கணிக்கப்பட்ட ஒரு மிகச் சிறந்த கிறிஸ்தவன். நல்ல பாடங்களை நமக்குக் கற்றுக் கொடுத்துள்ளான் என நம்புகிறேன். ஒருவேளை, நாம் நம்முடைய சமுதாயத்தாலும், குடும்பத்தாலும், ஏன் சபையாராலும் ஒதுக்கப்பட்டவர்களாக இருந்தாலும், தேவனுடைய பார்வையில் பிரியமானவர்களாக வாழமுடியும். மற்றவர்கள் நம்மிடமிருந்து பாடம் கற்றுக் கொள்ளும் ஒரு சிறந்த கிறிஸ்தவ வாழ்க்கையை நாம் நடத்திக்காட்ட முடியும் சந்தேகமில்லை.

இந்த நம்பிக்கையை நாம் பெற்றுக் கொள்ள இந்தக் காயு நமக்கு ஒரு நல்ல முன்மாதிரி. ஆகவே, நாம் காயு போல, தேவனுக்குப் பிரியமானவர்களாக வாழ்வோம். காயு போல சத்தியத்தில் நடந்து கொள்வோம். காயு போல சகோதரருக்கும், அந்நியருக்கும் உதவிகளை உண்மையாய்ச் செய்வோம். காயு போலவே சாட்சியான வாழ்க்கை வாழ்வோம்.

இப்படிப் பட்ட வாழ்க்கை வாழ தேவன் உங்களுக்கு உதவி செய்வாராக!

**S. ராஜநாயகம்**

# நீங்கள் கர்த்தருக்கு முக்கியமானவர்

நீங்கள் இருக்கும் இடத்தில் கிறிஸ்துவின் சபையை ஆரம்பிப்பது எப்படி என்பதுதான் இப்பாடத்தின் நோக்கம். சபையைப் பற்றியதான தவறான அபிப்பிராயங்களை சரிசெய்துவிட்டால், மற்ற எல்லாம் சரியாகிவிடும் என்று நாங்கள் நம்புகிறோம். சபையை நாங்கள் அதிமுக்கியப்படுத்த விரும்பவில்லை. ஆனால் அதே சமயம் வேதாகமம் சபையைப் பற்றிச் சொல்வதைப் பேசாமலிருக்கவும் விரும்பவில்லை. அதைப் போலவே, கர்த்தருடைய சபையை கண்டுபிடிக்க முடியாத ஒரு இடத்தில் நீங்கள் இருந்து கர்த்தருடைய சபையின் அங்கத்தினராக நீங்கள் இருந்தால், அல்லது அந்த சபையில் நீங்கள் அங்கமாக சேர்ந்தால் நீங்கள் இருக்கும் இடத்தில் கர்த்தருடைய சபையை ஆரம்பிப்பதற்கு நீங்கள் ஒரு கருவியாக இருங்கள் என்று உங்களை ஊக்கப்படுத்த விரும்புகிறோம்.

இந்தக் குறிப்பிட்ட பாடத்தில், நீங்கள் கர்த்தருக்கு முக்கியமானவர் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

தேவன் மனிதனைப் படைத்தார், அவனை தமது சொந்த சாயலிலே படைத்தார் (ஆதி. 1 : 26, 27) (ஆதி 2:7), அதாவது, அவனுக்கு ஆவி, ஆத்துமா போன்ற அசையாதவற்றை தந்தார், (மத்தேயு 16 : 26) அவர் ஒரே பேரான குமாரனை கொடுமையான சிலுவையில் சாகக் கொடுக்கும் அளவிற்கு அவனை நேசித்தார். (யோவான் 15 : 13) ஏதோ ஒருவனுக்காக மாத்திரம் இதைச் செய்யாமல் எல்லா மனுக்குலத்துக்காகவும் இதை செய்தார். அதன் பொருள், ஒவ்வொரு மனிதனும் மிகமுக்கியமானவர். இன்னும் அதன் பொருள், நீங்கள் அவருக்கு முக்கியமானவர் என்பதே.

வேதாகமத்தில் சிறப்புக்குரியவர்களாக உள்ள தனி மனிதர்களை கவனியுங்கள். கர்த்தர் அவர்களை உபயோகப்படுத்த அனுமதித்ததால் அவர்கள் மகத்தான மனிதர்களாக மாறினர். நோவா, ஆபிரகாம், மோசே, தானியேல், ஏசாயா, எலியா, எலிசா, யோவான்ஸ்நானகன், அப்போஸ்தலர்கள் போன்ற இன்னும் அநேகரை எண்ணிப் பாருங்கள்.

உதாரணத்திற்கு, அப்போஸ்தலன் பவுலை கவனியுங்கள். த்ன்னுடைய வாழ்நாட்காலத்தில் கர்த்தருக்காக அவனால் என்ன சாதிக்கமுடிந்தது என்றும் பாருங்கள். கர்த்தருக்கும், அவருடைய பிள்ளைகளுக்கும் விரோதி என்றளவில் தன் வாழ்க்கையைத் துவக்கினான். ஆனால் அவன் மனமாற்றமடைந்தபின் கர்த்தருடைய காரியத்திற்காக மிக கடுமையாக வேலை செய்தான். அவன் மேற்கொண்ட சுவிசேஷப் பிரயாணங்களையும், கிறிஸ்துவினண்டையில் அவனால் வழிநடத்தப்பட்டவர்களையும் எண்ணிப் பாருங்கள். மற்ற

அப்போஸ்தலர்களுடன் சேர்ந்தும், தனிப்பட்ட அளவிலும் மிகச் சிரத்தை எடுத்து ஊழியம் செய்து அநேகரை மனமாற்றம் அடையச் செய்ததால், முப்பது வருடங்களுக்குள்ளாகவே நற்செய்தியானது உலகெங்கிலும் எடுத்துச் செல்லப்பட்டது. ஆர்வமும், ஒப்புக் கொடுத்தலும், ஊழிய வாஞ்சையும் இருந்தால், நம்பமுடியாத அளவுக்கு நன்மைகளை மிகச் சிலரால் அல்லது தனி ஒருவரால் செய்யமுடியும்.

அப்போஸ்தலர் 10-ம் அதிகாரத்தில் ஒரு மனிதனுக்கும், அவனுடைய குடும்பத்திற்கும் கொடுக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவத்தை கவனியுங்கள். அந்தக் குடும்பம், கொர்நெலியுவும் அவன் குடும்பத்தாரும்தான். கொர்நெலியு இராணுவத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் நல்ல மனிதன். அவன் பக்தியுள்ளவனும் கூட , எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் செய்து, தான தர்மங்களைச் செய்து கொண்டிருந்த இவனை தேவன் கவனித்தார். தொடர்ந்து நாம் வாசித்தால், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் படியான நோக்கத்தோடு பேதுரு இவன் வீட்டிற்கு வரும்படியான ஒரு ஏற்பாட்டை தேவன் செய்தார். இந்த ஏற்பாடு நடந்தேறியவுடன், காரியங்கள் இவ்விதம் நடந்ததென்று வேதாகமம் கூறுகிறது". (அப். 10 : 44-48).

கொர்நெலியும், அவன் வீட்டாரும் மனம் மாற்றப்பட்ட இச்சம்பவத்தில் விசேஷமாக அடங்கியிருக்கிற ஒரு காரியம் என்னவென்றால், அவர்கள் புறஜாதிகளாயிருந்தார்கள். கர்த்தருக்குள்ளாக மனமாற்றப்பட்ட முதல் புறஜாதியார் இவர்கள்தான். அப்போஸ்தலர் 8-ம் அதிகாரத்தில், எத்தியோப்பியாவில் இருந்து வந்த ஒரு மனிதனின் மனமாற்றத்தை நாம் படிக்கலாம். அவன் தொழுது கொள்ளும்படி எருசலேமுக்குப் போயிருப்பதால் அவன் யூத மார்க்கத் தமைந்தவனாயிருக்க வேண்டும். புறஜாதியானாக இருந்த கொர்நெலியுவும், அவன் வீட்டாரும் அந்நாட்களில் மனம் மாற்றப்பட்டது. கிறிஸ்துவின் காரியமாக என்ன அர்த்தம் தந்தது என்று எண்ணிப் பாருங்கள் புற ஜாதியரில் இருந்து வந்த முதல் கனி அவர்கள் தான். புறஜாதிகள் கிறிஸ்தவர்களாகவும், சபையின் அங்கத்தினர்களாகவும், வருவதற்கு மாதிரியாக, அந்நாள் முதற்கொண்டு பேசப்பட்டு வருகிறார்களென்பதில் சந்தேகமில்லை. அது மாத்திரமல்ல, அவர்கள் வழியாக வந்த எல்லா புறஜாதியரையும் நினைத்துப் பாருங்கள். இந்நாள் வரை பெரும்பாலான கிறிஸ்தவர்கள் புறஜாதிப் பின்னணியிலிருந்துதான் வந்துள்ளார்கள்.

இப்பொழுது எத்தியோப்பிய மந்திரியின் மனமாற்றத்திற்குச் செல்வோம். பிலிப்பு சமாரியாவில் குறிப்பிடத்தக்க வெற்றியுடன் ஊழியம் செய்து கொண்டிருந்த போதிலும், வேதம் இவ்விதம் கூறுகிறது. பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி : நீ எழுந்து தெற்கு முகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்திரமார்க்கமாய்ப் போ என்றான். அந்தப்படி அவன் எழுந்து போனான். அப்பொழுது எத்தியோப்பியருடைய

ராஜஸ்த்ரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும் அவளுடைய பொக்கிஷமெல்லாவற்றிற்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்து கொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து; ஊருக்குத் திரும்பிப் போகும் போது தன் இரதத்திலே உட்கார்ந்து, ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான். ஆவியானவர் : நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார். அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய் சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டு : நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான். அதற்கு அவன் ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும் என்று சொல்லி; பிலிப்புவை ஏறி, தன்னுடனே உட்காரும்படி அவனை வேண்டிக் கொண்டான். அவன் வாசித்த வேத வாக்கியம் என்னவென்றால் : அவர் ஒரு ஆட்டைப் போல் அடிக்கப்படுவதற்குக் கொண்டுபோகப்பட்டார்; மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக் குட்டியைப் போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார். அவர் தம்மைத் தாழ்த்தின போது அவருடைய நியாயம் எடுத்துப் போடப்பட்டது. அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப் போயிற்று அவருடைய வம்சத்தை யாராலே சொல்லிமுடியும் என்பதே. மந்திரி பிலிப்பை நோக்கி : தீர்க்கதரிசி யாரைக் குறித்து இதைச் சொல்லுகிறார்? தம்மைக் குறித்தோ, வேறொருவரைக் குறித்தோ? எனக்குச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். அப்பொழுது பிலிப்பு பேசத் தொடங்கி, இந்த வேத வாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான். இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில், தண்ணீருள்ள ஓர் இடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி : இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான். அதற்குப் பிலிப்பு : நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன் : இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி : இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறின பொழுது கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான். (அப் 8 : 26 - 39).

இந்த மனமாற்ற சம்பவத்தை வாசிப்பதிலிருந்து நாம் அநேக மகத்தான பாடங்களை தெரிந்துகொள்ள முடியும். ஆனால், இந்த இடத்தில் நாங்கள் வலியுறுத்த விரும்புவது இந்த மனிதன் தேவனுக்கு முக்கியமானவனாக இருந்துள்ளான் என்பதுதான். இவனுக்கு சத்தியம் போதிக்கப்பட்டு இவன் கர்த்தருக்ககுக் கீழ்ப்படியும் வாய்ப்பைப் பெறும்படியாக, கர்த்தருடைய தூதன்

இவனையும் பிலிப்புவையும் ஒன்று சேர்த்தார். சரி, யார் இந்த மனிதன்? இவன் மிகபக்தியுள்ளவன். யூதமார்க்கத்தின்படியாக தேவனை தொழுது கொள்வதற்கு எத்தியோப்பியாவிலிருந்து எருசலேமிற்குப் பிரயாணம் பண்ணி வந்தவன். அதன் பொருள், அவன் தாழ்மையும், நேர்மையும், ஒப்புக் கொடுத்தலும் உள்ளவன். கந்தாகே என்ற ராஜஸ்திரீக்கு பொக்கிஷதாரியாக இருந்தபடியால், இவன் அதிகாரமுள்ளவனாகவும் இருந்தான். இப்பொழுது, சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, தன் தேசத்திற்குத் திரும்பிவந்து, தனி மனிதனாகிய இவன் தன் தேசத் தலைவர்களிடமும், குடும்ப அங்கத்தினர்களிடமும், குடிமக்களிடமும் எந்த வகையான செல்வாக்குப் பெற்றிருந்திருப்பான் என எண்ணுகிறீர்கள்? தன்னுடைய் காரியமாக செயல்படும் மாபெரும் திராணியை கர்த்தர் இவனுக்குள்ளர்க கண்டிருக்கக் கூடுமென்று நாம் முடிவெடுக்க வேண்டும். ஆனால் இந்த எத்தியோப்பியன் கர்த்தரை ஏமாற்றமடைய செய்துவிட்டான் என நா ன் கடுமையாக சந்தேகிக்கிறேன்.

இப்பொழுது நீங்கள் யார்? ஒருவேளை நான் ஒன்றுமில்லையென்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் நீங்கள் உங்களுக்கு ஒன்றுமில்லாதிருக்கும் பொழுது, நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, அவருக்கு உங்களை ஒப்புக் கொடுக்கும் போது அவர் உங்களை எடுத்துப் பயன்படுத்தமுடியும். நீங்கள் இளைஞராக, முதியவராக, ஒரு பெண்ணாக, ஒரு ஆணாக, பணக்காரராக, ஏழையாக, படித்தவராக, படிக்காதவராக, அல்லது எப்படிப்பட்டவராகவும் இருக்கலாம். இந்நிலையில் நான் கர்த்தருக்கு ஒரு போதும் ஒரு பொருட்டாக இருக்க முடியாதென்று அதை ஒரு சாக்காக பயன்படுத்தலாம். ஆனால் உங்கள் எண்ணம் தவறானது. வேதாகமத்தில் உள்ள ஆண்களையும், பெண்களையும் கவனியுங்கள். அவர்களை தேவன் எப்படி எடுத்து, தனக்காக சிறந்த ஊழியர்களாக பயன்படுத்தினார் என்று பாருங்கள். அதையே, ஏன் உங்களிடம் தேவன் செய்ய முடியாது? நான் சொல்ல வருவது இதுதான். நீங்கள் கர்த்தருக்குக் கீழ்படிந்து, அவருடைய சபையில் அங்கமானால், இன்று நீங்கள் உங்களை அவருக்குக் கொடுத்தால், அதாவது, நீங்கள் அவருக்காக வேலை செய்தால், பிறகு நீங்கள் ஒரு பிரசங்கியாகவோ, வேத ஆசிரியராகவோ, . . . . அல்லது அவருடைய காரியமாக ஏதாவது ஒருவகையில் அவருக்காக பணியாற்றக் கூடியவராகவோ இருக்கமுடியும்.

இந்த தொடர் பாடங்களில் நாங்கள் வலியுறுத்துவது போல, கிறிஸ்துவின் சபை இல்லாத இடத்தில் நீங்கள் ஒருவேலை தொடங்கும்படியாய் நீங்கள் தலைமையேற்றுக் கொள்ள முடியும். ஆம். நீங்கள் அதைச் செய்ய முடியும். கர்த்தர் உங்களோடிருந்து உங்களுடைய முயற்சிகளை ஆசீர்வதிப்பேன் என்று வாக்குக் கொடுத்துள்ளார். தயவு செய்து இந்தக் காரியங்களை உங்கள் மனதில் நினைத்து, தேவ சித்தம் உங்கள் வாழ்க்கையில் நடந்தேறும் படியாக ஜெபியுங்கள்.

**J.C CHOATE** **J.C. சோட்**

பெண்கள் பகுதி

# எப்படி ஆராதிப்பதென்பது கூட நமக்குத் தெரியவில்லை

**.உண்மையைத் தேடி பாகம் 5**

"நம்முடைய திட்டங்களில் கொஞ்சம் மாறுதல் செய்வோம்" என்று ஆண்ட்ரூ தன் கருத்தை தெரிவித்தான். அடுத்தவாரம் உன்னுடைய ஆலயத்திற்குச் செல்லும்வரை பொறுத்திருப்போம். சொல்லப் போனால் ஒவ்வொரு ஞாயிறு காலையிலும் வித்தியாசமான ஆலயங்களுக்கச் சென்று அவர்கள் என்ன போதிக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்வோம். ஆனால் எல்லா ஞாயிறு மாலைப் பொழுதிலும் நம்முடைய வீட்டிலே இருந்து அவரை தொழுகை செய்ய நேரத்தை ஒதுக்குவோம்" என்றான்.

"ஆம், நானும் அதை விரும்புகிறேன்" என்று ரேச்சல் ஒத்துக் கொண்டாள். ஆனால், சரியான முறையில் எவ்வாறு ஆராதனை செய்வதென்பது கூட நமக்குத் தெரியாது. பியானோ, கித்தார் போன்ற இசைக் கருவிகள் நமக்கில்லாதிருக்கும்போது நாம் எவ்வாறு பாடமுடியும்? ஆராதனைக்கென்று விசேஷித்த ஒரு இடமில்லாமல், சாதாரணமான வீட்டில் இருந்து ஆராதனை செய்வதென்பது சரியான ஒன்றரக இருக்ககுமா?

"ஒவ்வொரு காரியத்திலும் நாம் கற்றுக் கொள்ள வேண்டியது நிறைய உள்ளன!" என்று ஆண்ட்ரூ புன்னகைத்தான். நம்மிடையே கித்தார் இல்லாமலிருப்பது மட்டுமல்ல, எந்தவொரு பாடலும் பாடத் தெரியாதே. நாளை நான் வேதாகமம் இருக்கும் புக் ஸ்டாலுக்குச் சென்று விசாரித்து வருகிறேன். ஒருவேளை அவர்கள் பாடல் புத்தகங்களோடு ஒலி நாடாவையும் வைத்திருக்கக் கூடும். அது நமக்கு பாடல் கற்றுக் கொள்ள உதவும்.

நமக்கு எதுவுமே அதிகபட்சம் தெரியாதிருக்கும்போது, ஒத்த வாக்கியத்தை எடுத்து அதில் "ஆராதனை" என்ற வார்த்தையைப் பற்றி பார்ப்போமா?" என்று வினவினாள், ரேச்சல்.

இயேசு கிறிஸ்து சாத்தானால் சோதிக்கப்படுகையில், "அப்பாலே போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். (மத். 4 : 10). எனவே மாதாவையோ, புனிதர்களையோ, விக்கிரகங்களையோ, அல்லது மற்றவைகளையோ, தொழுது கொள்ளலாமா என்ற கேள்விக்கே இங்கு இடமில்லாமல் போய்விட்டது.

இப்படி நேரடியான கட்டளைகள் வேதாகமத்தில் கொடுக்கப் பட்டிருக்கும் போது மதத்தைப் போதிப்பவர்கள் ஏன் இவைகளை மறுத்து விடுகின்றனர்? எனக் கேட்டாள் ரேச்சல்.

மத். :15 : 9ம் வசனத்தில், "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்" என்றுள்ளது. இன்று இதைத்தான் அநேக மக்கள் அப்படியே செய்து கொண்டுள்ளனர். தங்களுக்கென்று தனிச் சட்டங்களை உருவாக்கிக் கொள்கின்றனர். இயேசு கிறிஸ்து இதை அறிந்துதான் இதைப் பற்றி எச்சரித்திருக்கிறார். தங்களுடைய சொந்த எண்ணங்களையும், சட்டங்களையும் தேவனுடைய வார்த்தைக்கு இணையாக வைத்து போதிக்கும் இம்மக்களின் கொடிய தன்மையை ஆச்சரியமிக்க தொனியுடன் வெளிப்படுத்தினான் ஆண்ட்ரூ. இதை குறித்து இயேசு கிறிஸ்து மிகத் திட்டமாகக் கூறிவிட்டார். "வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்" என்று. எனவே, நாம் எவ்வாறு ஆராதிப்பது என்பது மிக முக்கியமான ஒன்று. ரேச்சல், நாம் என்னவெல்லாம் செய்யப் போகிறோமோ அவைகளையெல்லாம் வேதாகமத்தோடு ஒத்துப் போகிறதா என்று பரிசோதித்துப் பார்க்க வேண்டும்.

பொதுவாக மக்கள் உண்மையாயும், உத்தமமாயும் நீண்ட நாட்களுக்கு வாழ முடியாது என்று நினைக்கின்றனர். ஆனால் தேவன் அதை எதிர்பார்க்கிறார். இந்த அகில உலகையும் சிருஷ்டித்ததோடு அல்லாமல் தன் சொந்த குமாரனையே நமக்காக சாகக் கொடுத்த அவரண்டை சென்று, அவர் சொல்லுகிறபடி செய்ய வேண்டாமா? அவரண்டை செல்லுவ தென்பதே நமக்கு கிடைத்த பெரும் பாக்கியம். எனவே தாழ்மையோடு அவர் சந்நிதியில் அதாவது ஆராதனையில் பங்கேற்பது என்பது கட்டாயமான ஒன்று.

சரியாகச் சொன்னாய் ரேச்சல், தேவனுக்கு பிரியமில்லாத ஆராதனை அவருக்கு துக்கத்தைத்தான் கொடுக்கும். ஒத்த வாக்கியத்தை எடுத்துப் பார்த்தால், அதில் போடப்பட்டிருக்கிறது யோவான் 4 : 20ல், "தேவன்

ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும்" என்றுள்ளது. வேதத்தில் எது சொல்லப்பட்டாலும் அது மிகவும் முக்கியத்துவம் பெற்ற ஒன்றாகத்தான் இருக்கும். ஏனென்றால் அது ஆவியானவரால் அருளப்பட்டது.

நான் மீண்டுமாக நமக்கு பிடித்தமான அதிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று சிரித்தபடியே கூறினாள் ரேச்சல். இதுவும் ஆராதனையைப் பற்றிய ஒன்றுதான். அப். 2 : 42ல் ஞானஸ்நானம் பெற்ற 3000 பேரைப் பற்றிக் கூறுகையில், "**அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.**" என்றுள்ளது அவர்கள் எவ்வாறு ஆராதனை செய்தார்கள் என்பதைக் குறித்து போதிய அளவில் இங்கு கூறப்பட்டுள்ளது.

அப்போஸ்தலருடைய உபதேசம் என்பது பிரசங்கத்தின் மூலம் வேத வசனங்களைப் படிப்பதற்கும் "ஐக்கியம்" என்பது கிறிஸ்தவர்கள் ஒன்றாகச் சேர்ந்து அவரை ஆராதிப்பதற்காக கூடிவருவதில் கிடைக்கிறது. "அப்பம் பிட்குதல்" என்றால் என்ன?

'எல்லோரும் சேர்ந்து சாப்பிட்டார்கள்" என்றிருக்கலாம். அல்லது நற்கருணை என்று பாதிரியார்கள் கூறுவது போல் இருக்கலாம் என்று ரேச்சல் யோசனை செய்தாள். சரி. இதற்கும் வேதத்திலிருந்து விடை காண வேண்டும் என்று வேதாகமத்தைப் புரட்டி மத் : 26-ல்26ம் வசனம் துவங்கி 30ம் வசனம் வரை வாசித்தான் ஆண்ட்ரூ.

அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து, நீங்கள் வாங்கிப் புசியுங்கள். இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார்.

பின்பு பாத்திரத்தையும் எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து நீங்கள் எல்லோரும் இதிலே பானம் பண்ணுங்கள்.

இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது.

இது முதல் இந்தத் திராட்ச பழரசத்தை நவமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம் பண்ணும் நாள்வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள் ஆண்ட்ரூ பிரமிப்புடன் இதைப்பார் ராஜ்யம்

என்று சொல் மீண்டும் இங்கு காணப்படுகிறது என்றான்.

எனவே, இந்த வகையான போஜனம் தான் கிறிஸ்தவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து கடைப்பிடிக்கிற "அப்பம் பிட்குதல்" என்று முடித்தாள் ரேச்சல். நாம் தொடர்ச்சியாக அப்போஸ்தலர் நடபடிகளை வாசிப்போமானால் நிறைய காரியங்களைக் கற்று கொள்ளமுடியும். மத். 26 : 30ல் அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டை பாடின பின்பு ஒலிவமலைக்குப் புறப்பட்டு போனார்கள் என்று பார்க்கிறோம்.

இங்கே யாரும், பியானாவையோ, அல்லது கித்தாரையோ, அல்லது எந்தவொரு வாத்தியக் கருவியையோ வாசித்துப் பாடாமல் வெறுமனே பாடினார்கள் என்று போடப்பட்டிருக்கிறது. இதை ரேச்சல் கண்டுபிடித்தாள்.

சரி, இதைப்பற்றி ஒத்தவாக்கியத்தில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது? என ஆச்சரியத்துடன் வினவினான் ஆண்ட்ரூ அவர்கள் பியானோ, கித்தார் அல்லது வேறுவகையான கருவிகளை உபயோகிக்கவில்லையென தெரிகிறது. புல்லாங்குழல் என்றால் என்ன? ஆம், என்று பதில் கூறி கொரிI 14 : 7ஐ வாசித்தான் ஆண்ட்ரூ வாசித்தபின்பு இந்த புல்லாங்குழலானது ஆராதனையோடு சம்பந்தப்பட்ட ஒன்று அல்ல. அப்படியே புல்லாங்குழல், சுரமண்டலம் முதலாகிய சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியங்கள் தொனிகளில் வித்தியாசம் காட்டாவிட்டால் எதின் சத்தம் என்று எப்படி தெரியும்? ஒரு வேளை இசைக்கருவிகளைஉபயோகித்தது உண்மையாய் இருக்குமேயானால் கட்டாயம் வேதாகமத்தில் உள்ள ஆராதனையில் அது குறிப்பிடப்பட்டிருக்கும். எந்த சபையிலும் இது பயன்படுத்தப் படவில்லையா? ஆமாம் ! என்று ரேச்சல் கூறினாள்.

புல்லாங்குழலைப் பற்றி வெளிப்படுத்தின விசேஷத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்த உலகில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஆராதனையோடு சம்பந்தப்படவில்லை. மாறாக அது பரலோகத்திலுள் ளவைகளைப் பற்றியது. அந்த உலகம் இந்த உலகத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒன்று. தங்கமயமான வீதி என்று நான் அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறேன். அது உண்மையான தங்கமா? ஏதோ தங்கத்தோடு ஒப்பிடக்கூடிய ஆச்சரியமும், அழகும்மிக்க ஒன்றா?

"எனக்குத் தெரியாது" ஆண்ட்ரூ பதிலுரைத்தான். இந்த உலகத்தில் மக்கள் எவ்வாறு ஆராதனை செய்தார்கள் என்று நாம் கண்டுபிடிக்க வேண்டும். தேவனை அவமதிக்காத அளவில் ஆதிக்கிறிஸ்தவர்கள் செய்த

அதே மாதிரியான ஆராதனையைத்தான் நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

மத்தேயுவில் கூறியபடி இயேசுவும் அவருடைய சீஷரும் ஸ்தோத்திரப்பாட்டை பாடினார்கள் என்று பார்த்தோம். எனவே "பாட்டு" எங்கெல்லாம் இருக்கிறது என்று தேடிப் பார்க்க வேண்டும் என்றாள் ரேச்சல், பழைய ஏற்பாட்டிலே தேவனுக்கு மகிமை உண்டாக பாடினார்கள் என்று ஏராளமான பட்டியலை நாம் காண முடியும். ஆனால் புதிய ஏற்பாட்டில் அவ்வாறில்லை. "ரோமர் 15 : 9ல்", "உம்முடைய நாமத்தை சொல்லி சங்கீதம் பாடுவேன்" என்று எழுதியிருக்கிறது. I கொரி 14 : 15ல் "நான் ஆவியோடும் பாடுவேன் கருத்தோடும் பாடுவேன் என்று உள்ளது". எபிரேயர் 2 : 13ல் சபை நடுவில் உம்மை துதித்துப் பாடுவேன் என்று உள்ளது. யாக்கோபு 5 : 13ல் ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன் என்று உள்ளது. கொலேசேயர் 3 : 16ல் "உங்கள் இருதயத்தில் கர்த்தரை பக்தியுடன் பாடி" என்று உள்ளது.

மீண்டும் ஆண்ட்ரூ எபேசியர் 5 : 19ஐ எடுத்து, "சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி" என்று வாசித்தான்.

எந்தவொரு இடத்திலும் இசைக் கருவிகளைப் பற்றிக் கூறவேயில்லையே? என திகைத்தாள் ரேச்சல்.

இசைக்கருவிகள் வாசித்துப் பாடும் போது வார்த்தைகளை நாம் சரியாக கவனிக்க முடியாது. அவைகள் விளங்கவும் செய்யாது என்று கூறினான் ஆண்ட்ரூ

இதைப் பற்றி இன்னும் அதிகமாகப் படிக்க வேண்டும் என்று ரேச்சல் கூறினாள். இதுவரை நாம் கற்றதிலிருந்து ஆராதனையில் உண்மையோடு பாடினால் போதும் என்பதை தெரிந்து கொண்டோம்.

"மேலும் எபேசியர், கொலோசெயர் போன்ற நிருபங்களில் நாம் தொடர்ந்து வாசித்தால் தேவனுக்கு நன்றி சொல்வது, ஜெபிப்பது, போன்றவைகளில் அவைகள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மூலம் தான் இருக்க வேண்டும் என்பதை கவனித்தாயா? என ஆண்ட்ரூ கேட்டான்.

ஆமாம் அது தான் சரி ". என்றாள் ரேச்சல்.

"நல்ல ஒரு நிறைவை பெற்றுவிட்டோம்" என்று நம்புகிறேன். நாம் ஆரம்பிக்கும் போது எவ்வாறு ஆராதனை செய்வது என்று அறியாமல் இருந்தோம். ஆனால் இப்போது வேதத்தை வாசித்ததின் மூலம் ஆராதனை

என்றால் என்ன, ஐக்கியம், அப்பம் பிட்குதல், பாடல், ஜெபம் இவைகளைப் பற்றி தெரிந்து கொண்டோம்.

இன்னும் ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கும் நிறைய காரியங்களை வேதத்தின் துணையோடு கண்டுபிடிப்போம். ஆனால் ஒரு காரியம் மெய் என்பதை உணர்ந்து கொண்டோம். மேற் சொன்ன இந்த காரியங்கள் அனைத்தும் முதலாம் நூற்றாண்டு கிறிஸ்தவர்களால் கடைப்பிடிக்கப் பட்டவைகள். அவைகளையே நாமும் பின்பற்றினால் நாம் சரியான காரியம் செய்தவர்களாயிருப்போம் என்பதில் சந்தேகமில்லை" என்று கூறி முடித்தான் ஆண்ட்ரூ.

(தொடரும்)

பெட்டி சோட் ரேச்சல் ராஜநாயகம்


# அருமையான வாய்ப்பு

***பரிசுத்த ஆவியானவரின் பணி*** **(170 பக்கங்கள்)** மற்றும் ***புதிய ஏற்பாட்டு ஆராதனை*** **(112 பக்கங்கள்)** ஆகிய நூல்கள் தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும் வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

***புத்தகம் முற்றிலும் இலவசம்*** ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ. **15/-**

முகவரி : ***தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்***
தபால் பெட்டி எண் **27,** காங்கயம் **- 638 701.**

குறிப்பு : *தயவு செய்து* **M.O.** *மாத்திரம் அனுப்பவும். மணியார்டர் கூப்பனில் உங்கள் முகவரியை தெளிவாக எழுதுங்கள்.*

# உண்மையான மனந்திரும்புதல்

மனந்திரும்புங்கள் என்ற கட்டளை கீழ்படிவதற்கு மிகவும் சிரமமான கட்டளைகளில் ஒன்று என கருதப்பட்டு வந்துள்ளது. ஒருவனுடைய அல்லது ஒருத்தியினுடைய மனதை மாற்றி, வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவது சுலபமானதல்ல. இதற்கு வேதாகாம உதாரணங்கள் அநேகம் இருந்தாலும், நம்முடைய தியானத்திற்கென்று கொரிந்தியர் நிருபத்தை எடுத்துக் கொள்வோம். கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தில் சபையில் இருக்கும் அநேக பிரச்சனைகளை குறித்து பவுல் எழுதுகிறார். ஆனால் ஆறு மாதத்திற்கு பின்பு இரண்டாம் நிருபம் எழுதும் பொழுது ஒரு மகிழ்ச்சியான தொனியில் எழுதுகிறார். ஏனென்றால் கொரிந்து சபையார் உண்மையாய் மனந்திரும்பியதால், உண்மையான மனந்திரும்புதலுக்கு என்ன தேவை என்பதை 2 கொரி 7 ; 8-11லிருந்து படிப்போம்.

**முதலாவதாக உண்மையான மனந்திரும்புதலுக்கு பாவத்தின் சுபாவத்தையும் அதின் பின்விளைவையும் தெரிந்திருக்க வேண்டும்.**

"ஆதலால் நான் நிருபத்தினாலே உங்களை துக்கப்படுத்தியிருந்தும், அந்த நிருபம் கொஞ்சப் பொழுதாகிலும் உங்களை துக்கப்படுத்தினதென்று கண்டு நான் மனஸ்தாபப்பட்டிருந்தும், இப்பொழுது மனஸ்தாபப் படுகிறதில்லை (2 கொரி. 7 : 8). பவுல், கொரிந்தியருக்கு முதலாம் நிருபம் எழுதும்போது அவர்கள் செய்த கொடிய பாவங்களையும், அதன் விளைவுகளையும் பற்றி அவர்களின் கவனத்தை திருப்பினார். (I கொரி. 5 : 11 - 13). அவர் இவ்வாறு எடுத்துக் கூறியதால், கொரிந்து சபையார் மனஸ்தாபப்பட்டார்கள். ஆதலால் மனந்திரும்பினார்கள். பவுலின் முதலாம் நிருபம் கொரிந்தியர்கள் தாங்கள் பாவத்திற்காக மனஸ்தாபப்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காக எழுதப்பட்டது. அது நிறைவேறியதால், பவுல் அவர்களின் பாவத்தை குறித்து சொன்னதை பற்றி மனஸ்தாபப் படவில்லை, ஒரு வேளை பவுல், பாவத்தை குறித்து அவர்களின் கவனத்தை திருப்பவில்லை என்றால் அவர்கள் மனஸ்தாபப்பட்டிருப்பார்களா? மனந்திரும்பியிருப்பார்களா?

நாம் உண்மையாக மனந்திரும்ப வேண்டுமென்றால், பாவத்தின் சுபாவத்தையும், அதன் பின் விளைவையும் அறிந்திருக்க வேண்டும். பாவத்தின் விளைவுகள் ஆவிக்குரியதாயும், தேவனிடத்திலிருந்து வருவதாயுமிருக்ககிறது. (ரோ. 6 : 23, ஏசா. 59 : 1-2, எசே. 18 : 20). இயேசு பின்வருமாறு கூறுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லையே. நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப் போவீர்கள் (லூக் 13 : 3).

**இரண்டாவதாக : உண்மையான மனந்திரும்புதலுக்கு தேவனுக்கேற்ற துக்கம் தேவை.**

"இப்பொழுது சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் துக்கப்பட்டதற்காக அல்ல, மனந்திரும்புவதற்கேதுவாகத் துக்கப்பட்டதற்காகவே சந்தோஷப் படுகிறேன். நீங்கள் ஒன்றிலும் எங்களால் நஷ்டப்படாதபடிக்கு, தேவனுக்கேற்ற துக்கம் அடைந்தீர்களே. தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகின்றது; லௌகீக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது. (2 கொரி. 7 : 9 - 10). கொரிந்தியர்கள் மனந்திரும்ப வேண்டும் என்ற நோக்கம். முதல் நிருபத்தால் நிறைவேறியது. (2 கொரி 2 : 3-4). கொரிந்தியர்கள் தேவனுக்கு ஏற்ற விதத்தில் மனஸ்தாபப்பட்டார்கள். அதுவே தேவனுக்கேற்ற துக்கம் என விவரிக்கப்படுகிறது. தேவனுக்கேற்ற துக்கம் என்றால் "தேவ வசனத்தின்படி அல்லது தேவனின் எண்ணத்தின் படி", தேவன் எப்படி பாவத்தை பார்க்கிறாரோ அப்படி நாம் பார்த்தால், தானாக விளைவதுதான் தேவனுக்கேற்ற துக்கம். தேவன் பாவத்தை வெறுக்கிறார். (நீதி. 6 : 16 - 19; சங். 1 : 6). ஆதலால் நாமும் அதை வெறுக்க வேண்டும். (சங் 119 :104, நீதி 8 : 13). பாவம் நம் இருதயதத்தை கிழிக்க வேண்டும், அதன் மூலம் தேவனிடத்தில் மன்னிப்பு பெற வேண்டும் என்ற விருப்பம் நமக்குள் இருக்க வேண்டும் (மத். 5 : 3-4;, யாக். 4 : 8 -9) தேவனுக்கேற்ற துக்கம் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது என்பதை கவனிக்க வேண்டும். வெறும் துக்கத்திற்கும், மனந்திரும்புதலுக்கும் வித்தியாசம் உண்டு. துக்கம் மனந்திரும்ப வழி நடத்தும், ஆனால் துக்கப்படுவது மாத்திரம் மனந்திரும்புதல் ஆகாது. ஒருவன் அல்லது ஒருத்தி மனந்திரும்பாமல் துக்கப்படலாம், ஆனால் உண்மையான மனந்திரும்புதல், முதலாவது தேவனுக்கேற்ற துக்கம் உண்டாகாமல் நிகழாது. மனந்திரும்புதல் என்பது ஒருவரின் நோக்கத்தை, நினைவை மாற்றுவது. அது பாவத்தை குறித்த துக்கத்தால் உண்டாயிருக்கிறதது. அது வாழ்க்கையை மாற்ற வழிவகுக்கும் (லூக். 15 : 17 - 20). தேவனுக்கேற்ற துக்கம், மரணத்தை உண்டு பண்ணுகிற லௌகீக துக்கத்தோடு வித்தியாசப்படுத்தப்படுகிறது. லௌகிக துக்கம் தேவனை குறித்து சிந்திப்பதால் வருவதல்ல, உலகத்தைக் குறித்து நினைப்பதால், யோசனை செய்வதால் வருவது. நாம் ஒன்றில் பிடிபட்டோம் என்பதற்காகவும், உலக காரியத்தில் தோற்றுப்போனோம் என்பதற்காகவும் மாம்ச இச்சையினாலும் துக்கப்படலாம். ஆனால், இந்த துக்கம் நம்மை உண்மையான மனந்திரும்புதலுக்கு வழி நடத்தாது, மாறாக மரணத்திற்கு வழி நடத்தும். பாவம், தேவனுக்கு விரோதமான செயல் என்றும், அது நம்மை தேவனிடத்தில் இருந்து பிரிக்கும் என்றும் உணர்ந்தால்தான் மனந்திரும்புதலை உண்டாக்குகிற தேவனுக்கேற்ற துக்கம் உண்டாகும்.

**மூன்றாவதாக : உண்மையான மனந்திரும்புதலுக்கு வாழ்வில் மறுமலர்ச்சி தேவை**

பாருங்கள், நீங்கள் தேவனுக்கேற்ற துக்கமடைந்ததுண்டே; அது உங்களிடத்தில் எவ்வளவு ஜாக்கிரதையும், குற்றந்தீர எவ்வளவு, நியாயஞ் சொல்லுதலையும், எவ்வளவு வெறுப்பையும், எவ்வளவு பயத்தையும், எவ்வளவு ஆவலையும், எவ்வளவு பக்தி வைராக்கியத்தையும், எவ்வளவு கண்டிப்பையும் உண்டாக்கிற்று. இந்தக் காரியத்திலே நீங்கள் எல்லாவிதத்திலும் உங்களை சுத்தவான்களென்று விளங்கப் பண்ணீர்கள் (2 கொரி. 7 : 11). கொரிந்தியர்கள் சீர்பட்டிருக்கிறார்கள், தற்பொழுது உள்ள நடத்தையை குறித்து மிகுந்த எச்சரிக்கையாக இருக்கிறார்கள் (I கொரி 5 : 2) தங்கள் செயல்களில் இருந்து தீய செயல்களை அவர்களே களைந்திருக்கிறார்கள். இப்பொழுதோ, கொரிந்தியர் முதல் நிருபத்தில் பவுல் எழுதிய பாவத்தை செய்தோம் என்றும் அதை பொறுத்து கொண்டோம் என்றும் தங்கள் மீதே நீதியிலே கோபம் உடையவர்களாக இருக்கிறார்கள். ஒருவேளை பவுல் எழுதியவைகளுக்கு இவர்கள் பதிலளிக்காமல் இருந்தால் பவுல் என்ன நடவடிக்கை எடுத்திருப்பார் என்ற "பயம்" இவர்களுக்கு இப்பொழுது இருந்தது (I கொரி. 4 ; 21) இப்பொழுது தேவனிடத்தில் ஒப்புரவாக மட்டுமல்ல. பவுலிடத்திலும் நல் ஆதரவை பெற வேண்டும் என்ற ஆவலோடிருந்தார்கள். முன்பு பாவத்தை குறித்து பாராட்டின அலட்சியத்தை ஈடு செய்ய வேண்டும் என்ற வாஞ்சை அதிகமாய் இருந்தது. "பழி வாங்குதலை" தேவனுக்கு விட்டு விட்டு, பவுலின் உபதேசத்தின்படி குற்றவாளிகளை சரியாக சீர்படுத்தினார்கள். கொரிந்தியர்கள், செய்த இந்த வாழ்க்கை மறுமலர்ச்சி மூலமாய், தங்களை எல்லாவிதத்திலும் சுத்தவான்களென்றும், உண்மையாய் மனந்திரும்பினார்கள் என்றும் விளங்கப் பண்ணினார்கள்.

**உண்மையான மனந்திரும்புதலுக்கு தேவை :**

1. பாவத்தின் சுபாவத்தையும் அதன் விளைவையும் உணர்வது.
2. பாவத்தை குறித்து தேவனுக்கேற்ற துக்கம்
3. வாழ்க்கையில் மறுமலர்ச்சி

தேவன் எல்லோரையும் மனந்திரும்ப அழைக்கிறார் அப். 17 : 30. தேவன் அதுவரைக்கும் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். (2 பேதுரு 3 : 9). அவன் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு வெளியேயிருந்தாலும், தவறுகின்ற தேவனுடைய பிள்ளையாய் இருந்தாலும் அவன் அல்லது அவள் தேவனுடைய அன்பை பெற உண்மையாக மனந்திரும்ப வேண்டும். (அப். 2 : 38, அப். 8 : 22).

நீங்கள் உண்மையாக மனந்திரும்பிவிட்டீர்களா?

**தமிழில்: ஜே. பிக்கின்ஸ்** **பிரெய்ன் கென்யன்**

# ' 'நாகூம்" தீர்க்கனின் புத்தகம்

பெயரின் பொருள் : ஆறுதல், தேற்றுதல்

காலம் : கி.மு. 625

யாருக்கு? : யூதாவுக்கு

பொருள் : நினிவேயின் அழிவு

சிறப்பு : தேவமனிதன் நீதியான முறையில் கோபம் கொள்ள முடியும்.

புறக் குறிப்பு : I நினிவேயின் அழிவு அறிவிக்கப்படுகிறது. அதி.1.

II நினிவேயின் அழிவு விவரிக்கப்படுகிறது. அதி.2.

II நினிவேயின் அழிவு நியாயமானது. அதி.3.

## *இது தரும் பாடங்கள்*

1. தேவனுடைய பொறுமைக்கு ஒரு எல்லையுண்டு.

2. பெருமையாலும், அக்கிரமத்தாலும், படை பலத்தாலும், சுயநலத்தாலும் கட்டப்படும் ஒரு தேசமானது, அழியும் போது தனக்கு உதவுவார் இருப்பார் என எதிர்பார்கக முடியாது.

3. தேவன் இன்னும் உலகத்ததை ஆளுகிறார்.

4. கலகம், கொடுங்கோன்மை போன்ற சகல தவறுகளையும் தேவன் வெறுக்கிறார்.

# ஆவியின் கனி

ஆதியிலே தேவன் மனுஷனுக்காக அனேக கனி விருட்சங்களை முளைக்கப் பண்ணினார். ஆனால் இயேசுவோ மனுஷனையே கனிதரும் விருட்சமாக கருதி மனுஷன் கனி கொடுக்க வேண்டும் என்றும் அக்கனியினால் தேவன் மகிமையடைய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார். மனுஷன் எவ்வாறு கனி கொடுக்க முடியும் என்று நினைக்கின்றீர்களோ! மனுஷனுடைய உள்ளத்தில் உருவாகும் சிந்தனைகளால் பிறக்கும் வார்த்தைகளும், கிரியைகளுமே அவன் தரும் கனிகளாக வேதம் கூறுகிறது. பூமியிலே மனுஷன் புசிக்கத்தக்க நல்ல கனிகளை கொடுக்கும். விருட்சங்களும் புசிக்கதகாத கனிகளை கொடுக்கும் விருட்சங்களும் இருப்பது போன்று மனுஷரிலும் நல்ல கனிகளை கொடுப்பவர்களும் கெட்ட கனிகளை கொடுப்பவர்களும் காணப்படுகிறார்கள்.

இன்று கிறிஸ்தவ மார்க்கத்தில் தீர்க்கதரிசனம் உரைக்கும் வரம் பெற்றவர்கள், அற்புதங்களை செய்யும் வரம் பெற்றவர்கள் என்று கூறிக் கொண்டு, தேவன் மகிமைபடும்படியான நற்கனிகளைக் கொடுக்க வேண்டும் என்று வாஞ்சையுடன் இருக்கும் பல நல்ல உள்ளங்களை திசைதிருப்பி அழிவுக்கு வழிநடத்தும் கள்ளதீர்க்க தரிசிகள் பெருகி வருகின்றனர். இச்செயல் இப்போது மட்டுமல்ல இயேசு கிறிஸ்துவின் நாட்களிலேயே காணப்பட்டுள்ளது. எனவே இயேசு தம்முடைய மலைப் பிரசங்கத்தில் ஜனங்களை எச்சரித்து கூறியதாவது "கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத் தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். அவர்களுடைய கனிகளினாலே அவர் களைஅறிவீர்கள்" என்று (மத். 7 : 15 - 16).

ஒரு விருட்சத்தின் தன்மையை அதன் கனி வெளிப்படுத்துவது போல ஒரு மனுஷனுடைய தன்மையை அவனுடைய செயல்கள் வெளிப் படுத்துகிறது. எனவே நாம் எப்பொழுதும் நற்கனியை கொடுக்கும் விருட்சமாக இருக்க வேண்டும். இல்லையேல் நாம் சபிக்கப்படத்தக் கவர்களாய் இருப்போம். ஒரு முறை இயேசு பெத்தானியாவிலிருந்து எருசலேம் நகரத்துக்கு திரும்பி வருகையில், அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது வழியருகே ஒரு அத்திமரத்தைக் கண்டு அதனிடத்திற்கு போய் அதிலே கனிகளைக் காணாமல் அதை பட்டுப் போகச் செய்தார். (மத் 21 : 19). அவ்வாறே தேவன் மனுஷன் மூலமாய் மகிமையடையும்படி அவனில்

ஆவியின் கனியை எதிர்பார்க்கின்றார். மனுஷன் கொடுக்கும் ஆவியின் கனி சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும். எனவே கர்த்தருக்கு பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்து பார்த்து கனியற்ற அந்தகார கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள் என்று பவுல் கூறுகிறான். (எபே. 5 : 9 -11). நற்குணங்களாகிய ஆவியின் கனி தேவனுடைய வசனத்தினால் தோன்றும். தாவீது கூறுகிறான். "துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் (இவ்விதமான அந்தகார கிரியைகளுக்கு உடன்படாமல்) கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான் என்று. (சங். 1 : 1 - 3).

கடந்த 9 இதழ்களிலும் ஆவியின் கனியான அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் என்னும் நற்குணங்களைக் குறித்து தியானித்தோம். இந்த நற்குணங்கள் தேவனுடைய வசனத்தினால் பிறக்க கூடியவைகள் என்பதை அறிந்து கொள்ளும் வகையில் அவைகளை மீண்டும் உங்கள் நினைவிற்கு கொண்டு வருகிறேன்.

**அன்பு :** தேவன் நம்மை அன்புள்ளவர்களாக உண்டாக்கினார். நம்மில் உள்ள ஆவியின் கனியான அன்பை தேவ சமூகத்தில் காண்பிக்க அவருடைய வசனங்களுக்கு கீழ்ப்படிய வேண்டும். இது மனுஷன் கைக் கொள்ளும்படி தேவனால் கொடுக்கப்பட்ட முதலாம் பிரதான கற்பனை 1 (யோ 5 : 31).

**சந்தோஷம் :** எரேமியா தீர்க்கதரிசி கூறுகிறான். உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்கு சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது என்று( எரே 15 : 16.)

**சமாதானம் :** தாவீது கூறுகிறான். "உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானம் உண்டு; அவர்களுக்கு இடறலில்லை என்று. (சங் 119 : 165).

**நீடிய பொறுமை :** அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறான் "தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும், ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்கள் ஆகும்படிக்கு முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் (வேத வசனம்) நமக்கு போதனையாக எழுதியிருக்கிறது. (ரோ. 15 : 4.)

**தயவு :** சாலெமோன் மூலம் தேவன் வெளிப்படுத்தியது. "என் மகனே, என் போதகத்தை மறவாதே; உன் இருதயம் என் கட்டளைகளைக் காக்கக் கடவது. அவைகள் உனக்கு நீடித்த நாட்களையும், தீர்க்காயுசையும் சமாதானத்தையும் பெருகப்பண்ணும். கிருபையும் சத்தியமும் உன்னை விட்டு விலகாதிருப்பதாக, நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு, அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக் கொள். அதினால் (வசனத்தினால்) தேவனுடைய பார்வையிலும், மனுஷருடைய பார்வையிலும் தயையும், நற்புத்தியும் பெறுவாய் என்று. (நீதி 3 : 1-4.)

**நற்குணம் :** பெரோயா பட்டணத்தார் மனோ வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள். (அப் 17:11).

**விசுவாசம்:** விசுவாசம் இல்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம். எனவே பவுல் கூறுகிறான். விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் என்று. (ரோ. 10 : 17).

**சாந்தம் :** சாந்தமுள்ளவர்களாய் வாழ்ந்து வெற்றியடைந்த தேவதாசர்களை குறித்து சித்தரிக்கும் வேத வசனங்களை தியானிப்பதால் நாமும் சாந்தமுள்ளவர்களாய் வாழ்ந்து வெற்றியடைய வேத வசனம் நமக்கு வழிகாட்டியாய் உள்ளது.

**இச்சையடக்கம் :** இச்சையினால் ஏற்படும் விளைவுகளையும் இச்சையடகக்கத்தினால் தேவனுடைய மகிமைக்குரிய கனிகளை கொடுக்க வேத வசனமே நம்மை நல்வழிப்படுத்துகிறது.

ஆவியின் கனி ஆவியினால் பிறக்க கூடியது இயேசு கூறுகிறார் "ஆவியே உயிர்பிக்கிறது, மாம்சமோ ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்கு சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது என்று (யோ. 6:63) மேலும் அவர் கூறுகிறதாவது " நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது என்று (யோ 14 : 24). தேவன் ஆவியாய் இருக்கிறார். அவருடைய பிள்ளைகள் அவரின் மகிமைக்குரிய கனிகளை கொடுக்க வேண்டும் என்பதற்காக இயேசுவை இவ்வுலகத்திற்கு அனுப்பினார். இயேசு கூறுகிறார் "நான் மெய்யான திராட்சைச் செடி என் பிதா திராட்சைத் தோட்டகாரர். என்னில் கனி கொடாத கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார்; கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனி களைக் கொடுக்கும்படி அதை சுத்தம் பண்ணுகிறார் என்று (யோ. 15 : 1-2). இயேசு மேலும்

கூறுகிறதாவது" என்னில் நிலைத்திருங்கள் நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சை செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய் கனி கொடுக்கமாட்டாதது போல நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனி கொடுக்கமாட்டீர்கள் என்று. (யோ. 15 : 4). நீங்களும் கனி கொடுக்க விரும்புகின்றீர்களா? கனி கொடுக்கும்படி இயேசுவோடு எவ்வாறு இசைந்திருக்க முடியும் என்று எண்ணுகின்றீர்களா? நாம் இயேசுவோடு இணைந்து அவரில் நிலைத்திருக்கும்படி அவர் தம்முடைய இரத்தத்தினால் சம்பாதித்த,(அவர் ஸ்தாபித்த) அவருடைய சபையை "கிறிஸ்துவின் சபையை" அவருடைய சரீரமாக கருதுகிறார். பவுல் (கொ. 1 : 18.) இயேசு ஒருவரே அவர் ஸ்தாபித்த சபையும் ஒன்றே (மத் 16 : 18, அப் 20 : 28) கொடி கனி கொடுக்கும்படி எவ்வாறு செடியுடன் நிலைத்திருக்கிறதோ அதுபோல தேவன் மகிமையடையும்படியான ஆவியின் கனி கொடுக்க இயேசுவின் சரீரமான சபையோடு இணைந்து நிலைத்திருக்கவே தேவன் உங்களை அழைக்கிறார். (1 கொ 1 : 9.)

தேவனுடைய அழைப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். கிறிஸ்துவின் சபையில் இணைந்து அவரில் நிலைத்திருங்கள். ஆவியின் கனி கொடுத்து தேவனை மகிமைப்படுத்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

*சகோ. ஹென்றிமோகன்*
*நீலகிரி.*

## *கனிதரும் கொடி*

என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில்
நிலைத்திருப்பேன்

ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால்
அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்.
என்னையல்லாமல் உங்களால்
ஒன்றும் செய்யக்கூடாது.

நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா
மகிமைப் படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.

*யோவான் 15:4,5.8*

# "தோல்வி என்பது முடிவானதல்ல"

- *தோல்வியினால், நான் தோற்றுவிட்டேன் என்று அர்த்தமல்ல,!*

  நான் இன்னும் வெற்றி பெறவில்லையென்றுதான் அர்த்தம்!!

- *தோல்வியினால் நான் ஒன்றுமே செய்து முடிக்கவேயில்லை என்று அர்த்தமல்ல*

  நான் ஏதோ ஒன்றை கற்றுக் கொண்டேன் என்று தான் அர்த்தம்!

- *தோல்வியினால், நான் ஒரு முட்டாளாக இருக்கிறேன் என்று அர்த்தமல்ல!*

  நான் இன்னும் அனுபவத்தால் கொஞ்சம் நம்பிக்கை கொண்டிருக்கிறேன் என்று தான் அர்த்தம்!

- *தோல்வியினால், நான் என்னுடைய மதிப்பை இழந்துவிட்டேன் என்று அர்த்தமல்ல.*

  நான் இன்னும் என்னுடைய முயற்சியின் சவால்களை சந்திக்க வேண்டுமென்று தான் அர்த்தம்!!

- *தோல்வியினால், நான் எதையும் சாதிக்க இயலவில்லை என்று அர்த்தமல்ல!*

  நான் வேறு வெற்றிக்கான வழிகளை செயலாக்க வேண்டுமென்றுதான் அர்த்தம்!!

- *தோல்வியினால், நான் தாழ்ந்தவனென்று அர்த்தமல்ல!*

  நான் இன்னும் பரிபூரணப் படவில்லை யென்றுதான் அர்த்தம்!

- *தோல்வியினால், நான் காலத்தை வீணடித்து விட்டேன் என்று அர்த்தமல்ல!*

  என்னுடைய காரண காரியங்களை ஆராய்ந்து பார்க்க இன்னும் அவகாசம் தேவை யென்றுதான் அர்த்தம்!!

- *தோல்வியினால், நான் துவண்டுவிட்டேன் என்று அர்த்தமல்ல!*

  நான் இன்னும் சற்று கடினமாக முயலவேண்டும் என்றுதான் அர்த்தம்!!

- *தோல்வியினால், என்னால் எதுவும் செய்ய இயலாது என்று அர்த்தமல்ல!*

  எனக்கு இன்னும் நீடிய பொறுமை தேவை என்று தான் அர்த்தம்!

- *தோல்வி என்பது, நான் தவறு செய்துவிட்டேன் என்று அர்த்தமல்ல!*

  நான் இதைவிட சிறந்த வழிகளை தேடிக் கண்டு பிடிக்க வேண்டுமென்று தான் அர்த்தம்.!!

- *தோல்வி என்பது, தேவன் என்னை கை விட்டு விட்டார் என்று அர்த்தமல்ல!*

  நான் இன்னும் அவருடைய சித்தத்தை கருத்தோடு தேட வேண்டுமென்றுதான். அர்த்தம்!!

**Lewis Timberlake**

*வே. தானியேல் துரைராஜன்*
*திருச்சி*

# "எபேசி 5 : 23" கிறிஸ்துவே சபைக்கு தலையாயிருக்கிறார்

நமக்கு ஒரு தலை கொடுக்கப்பட்டுள்ளார். மனித பலவீனத்தினாலோ அல்லது அழிந்துபோகும் தோல்விகளினாலோ ஆட்பட்டவரல்ல அவர். நாம் இந்த பூமியிலிருந்து, நித்தியத்தின் கரையை சென்று சேர வேண்டுமே, நாம் உடைந்து போன திசைகாட்சியை நம்பி போகலாமா?

சீயோன் என்ற கப்பலை நடத்தும் மாலுமி மேற்கண்ட பலவீனங்களினால் நிறைந்தவராக இருந்தால் நிலைமை என்னவாகும்?

நம்முடைய இந்த பயங்கள் நீங்கும்படியான வசனங்கள் தேவாவியினால் அருளப்பட்டிருக்கிறது. சபைக்கு தலைமை இயேசுவே யல்லாமல் வேறு யாருமல்ல. பவுல் எழுதுகிறார், "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல், புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்ககிறான். அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்." (எபேசி 5 : 23).

"கிறிஸ்துவே சபைக்கு தலையாயிருக்கிறார்" என்ற இந்த வார்த்தை உங்களுடைய சிந்தையில் ஆழமாகப் பதிவதாக கிறிஸ்து சபைக்கு தலையாயிருக்கிறார் என்ற அங்கீகாரம், யாரெல்லாம் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்கு சில உறுதிப்பாடுகளை அளிக்கிறது. பிழையற்ற வழிகாட்டுதலும், கிறிஸ்தவரல்லாதவரும் சபையில் சேருவதற்கு சில ஊக்கங்களும் இதனால் கிடைக்கிறது.

சரி, இயேசு " கிறிஸ்து சபைக்கு தலைவர்" எந்தெந்த வகையில் அவர் சபைக்கு தலைவராக இருக்கிறார் என்று சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

**"கிறிஸ்து தலையாயிருக்கிறார்" - அதிகாரத்தில்**

அவருக்கே! சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டுள்ளது. சபையை, அவர் தம்முடைய சட்டத்தினால், நடத்திச் செல்லுகிறார்.

இயேசு உயிர்த்தெழுந்ததற்குப் பிறகு பரத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு, அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். "அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக்

கீழ்ப்படுத்தி" அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் "கீழ்ப்படுத்தி" (எபேசி 1 : 21) கொலோ 1 : 18, 19லும் இதை வலியுறுத்துகிறார். எபிரெய எழுத்தாளர் சொல்லும்போது, இந்த கடைசி நாட்களில் தேவன் தம்முடைய குமாரன் மூலம் பேசுகிறார் (எபி. 1 : 12). இயேசுவை அவர் உன்னதங்களில் உயர்த்தி, ஆளுகையை அளித்திருக்கிறார். அவருடைய நாமம் எல்லா நாமத்திற்கும் மேலாக உயர்த்தப்பட்டுள்ளது. நாவுகள் அறிக்கை செய்ய வேண்டும், முழங்கால்கள் முடங்க வேண்டும். (பிலிப் 2 : 10, 11). கிறிஸ்து, ராஜ்யமாகிய சபையை ஆட்சி செய்கிறார், முடிவு வரும்போது, ராஜ்யத்தை தேவனிடத்தில் ஒப்புக் கொடுப்பார் (I கொரி 15 : 23, 24). மேலான அதிகாரத்திற்கு பயந்து கீழ்படிகிறோம் ஆனால் கிறிஸ்துவின் அதிகாரத்துக்கு அலட்சியமாயிருக்கிறோம்". **என்னுடைய சித்தமல்ல, உம்முடைய சித்தம் என்னில் ஆகட்டும்" என்று ஒப்புக் கொடுத்தல் வேண்டும்.**

## "கிறிஸ்து தலையாயிருக்கிறார் " முன் மாதிரியில்

கிறிஸ்து நமக்கு ஒரு சிறந்த முன்மாதிரி. கீழ்படிதலில், பாவமற்ற வாழ்க்கையில் அவரே நம்முடைய மாதிரி.

பேதுரு சொல்லும் போது " அவர் பாவஞ் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. அவர் வையப்படும் போது பதில் வையாமலும், பாடுபடும் போது பயமுறுத்தாமலும் நியாயமாய்த் தீர்ப்பு செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்". (I பேதுரு 2 : 22 -23).

அதிகாரத்தில் இயேசு எப்படி பூரணமாயிருக்கிறாரேர் அதைப் போலவே ஒழுக்கத்திலும் அவர் பூரணமாயிருக்கிறார். இயேசு தம்முடைய ஜீவியத்தின் மூலமாகவே, சபையை நடத்துகிறார். "அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும்" (I யோவான் 2 : 6). பவுல் சொல்லும் போது, "நான் கிறிஸ்துவை பின்பற்றுகிறது போல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" (I கொரி 11 : 1 நாம் வாசிப்போம். (எபி. 5 : 8,9).

## "கிறிஸ்து தலையாயிருக்கிறார்" அன்பில் He is the Head in Love

அவர் அன்பினால் நம்மை நடத்துகிறார், அவருடைய கட்டளைகள் யாவும் அன்பின் கட்டளைகள். அவர் மரிப்பதற்கு முந்திய மாலை நேரத்தில், சீடர்களுக்கு சொன்னது. "புதிய கட்டளையை நான் உங்களுக்கு கொடுக்கிறேன்.

நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள். எப்படியென்றால் நான் உங்களில் அன்பாயிருப்பது போல், இதினால் நீங்கள் என்னுடைய சீஷரென்று மற்றவர்கள் அறிந்து கொள்வார்கள். (யோவான் 13 : 34, 35). இந்த அன்பு நம்மை 3 நிலைகளில் உந்துகிறது. முதலில் அவரை (இயேசு) நேசிக்க ( I யோவான் 4 : 19) செய்கிறது. இரண்டாவதாக, மற்றவரை நேசிக்க ( I யோவான் 3 : 16) செய்கிறது. மூன்றாவதாக அவருடைய சித்தத்தை செய்ய நம்மை நெருக்கி ஏவுகிறது. என்னில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளை கைக் கொள்வீர்கள். (யோவான் 14 : 15). இயேசுவுக்கு நன்றாகத் தெரியும். "தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக் கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்திருந்தும் தம்முடைய அதிகாரத்தை, தகுதியை தவறாக பயன்படுத்தாமல், அன்பினால் அதை போதித்து அன்பினால் செயல்படுத்திக் காட்டினார். (யோவான் 13 : 14-15.)

முடிவாக : கிறிஸ்து சபைக்கு தலையாயிருக்கிறார். அதிகாரத்தின் முன் மாதிரியில், அன்பினால் சேவை செய்வதில் சபைக்கு (வேதாகமத்தின் படியான) சிறந்த தலைமை இருப்பது ஆசீர்வாதமானது. அந்த தலைமையின் கீழிருக்கும் சபையில் நீ இருக்கிறாயா? அந்த சபையை கிறிஸ்து அறிந்திருக்கிறார். அவருக்கு எப்படிப்பட்ட எதிர்காலமோ அப்படியே சபைக்குமுண்டு. அவர் வாக்குக் கொடுத்துள்ளார். அந்த சபையை உயிருடன் காத்து, அதை சுத்திகரித்து தமக்கு முன்பாக நிறுத்தப் போகிறார். (எபேசி 5 : 27).

அவரே அதை காத்து, அன்பினால் நடத்தி, மகிமையினால் முடிசூட்டுவாரேயானால், யார் தான் அந்த சபையில் இருக்க விரும்பமாட்டார்கள்?

நீ! இன்றைக்கு! கிறிஸ்துவினால் நடத்தப்படும் சபையில் இருக்கிறாயா?

தமிழில்: வே. தானியல் துரைராசன்

# தேவனுடைய பெட்டியைப் பற்றிய கட்டளை

தேவனுடைய கட்டளை ஆசாரியர் தவிர வேறு யாரும் தேவனுடைய பெட்டியை தொடவும், தூக்கவும், சுமக்கவும் கூடாது. இஸ்ரவேலரும் பெலிஸ்தரும் சண்டையிட்டார்கள். பெலிஸ்தர் ஜெயித்தார்கள். தேவனுடைய பெட்டியையும் தங்களோடு கொண்டுபோய் தங்கள் கோவிலில் வைத்தார்கள். அடுத்த நாள் வந்து பார்க்கும் பொழுது அங்குள்ள எல்லா சிலைகளும் விழுந்து நொறுங்கி கிடந்தன. அத்தோடு கொடிய வாதையினால் வாதிக்கப்பட்டார்கள். வாதை தாங்காது தேவனுடைய பெட்டியை இஸ்ரவேல் நாட்டிற்கு அனுப்பிவிட்டார்கள். தேவனுடைய பெட்டி அபினதாப் வீட்டில் வைக்கப்பட்டிருந்தது. அந்த தேவனுடைய பெடட்டியை எருசலேமுக்குக் கொண்டுவர அநேகர் சென்றிருந்தனர். தேவனுடைய பெட்டியை ஒரு புது இரதத்தின் மீது ஏற்றிக்கொண்டு வந்தார்கள். வரும் வழியில் மாடுகள் மிரண்டு பெட்டியை அசைத்தது. பெட்டி விழுந்து விடுமோ என்று நினைத்து வண்டியை ஓட்டிய ஊசா தன் கையை நீட்டி தேவனுடைய பெட்டியை பிடித்தான். அப்பொழுது கர்த்தர் ஊசாவின் மேல் கோபம் கொண்டு அங்கே அவனை அடித்தார். அவன் தேவனுடைய பெட்டி யண்டையில் செத்தான். நல்லது செய்கிறோம் என்று நினைத்து தேவனுடைய கட்டளையை மீறக்கூடாது.

உதாரணமாக கிறிஸ்து ஏற்படுத்திய சபையில் தேவனை வாய்மூலம் மட்டும் பாட வேண்டும். இசைக்கருவிகள் ஆதிமுதல் கிறிஸ்து சபையில் உபயோகிக்கப்படவில்லை. பின்னர் இசைக்கருவி பாடும்பொழுது சேர்க்கப்பட்டது. பிரிவினைச் சபையால் அவர்கள் சொல்லும் பதில் பழைய ஏற்பாட்டின் காலத்தில் இசைக் கருவிகள் சேர்க்கப்பட்டதால் இன்றும் நாங்கள் இசைக் கருவிகளைப் பாவிக்கிறோம் என்கிறார்கள். அத்துடன் இசைக் கருவிகளை சேர்க்கக் கூடாது என்று சொல்லவில்லையே என்கிறார்கள். அன்று பாடும் பொழுது இசைக் கருவிகள் உபயோகித்தார்கள் என்பதற்கு ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டால், தெரியாது என்கிறார்கள்; தேவனுடைய வார்த்தையோடு எதைக் கூட்டினாலும், அல்லது எடுத்துப் போட்டாலும் வாதைகள் உண்டு என்று தேவனுடைய வசனம் கூறுகிறது.

தேவன் கட்டளையிட்ட "உன்னைப் போல் பிறரை நேசி" இதைக் கைக் கொள்ளமாட்டார்கள். ஆனால் கட்டளையிடாத கிறிஸ்மஸ், சாம்பல் புதன் கிழமை, பெரிய வெள்ளிக்கிழமை, ஈஸ்டர் போன்ற மனிதனால் கூட்டப்பட்ட பாரம்பரிய வழக்கத்தை உதறித்தள்ளாது கெட்டியாய்ப் பிடித்துக் கொள்வார்கள். தேவனுடைய வசனத்தை கூட்டவோ, குறைக்கவோ கூடாது. ஒருவன் போதித்தால் தேவனுடைய வசனத்தின்படி போதிக்கக் கடவன் தேவனுடைய கட்டளையை மீறுவது பாவம்: பாவத்தோடு பரலோகம் செல்ல முடியாது என்று வேதம் நம்மை எச்சரித்துக் கொண்டே இருக்கிறது.

ஆதியில் அப்போஸ்தல திருச்சபை எதைச் செய்ததோ அதையே இன்று நாமும் செய்வோம். அப்போஸ்தல திருச்சபை உண்டென்று விசுவாசிக்கிறோம். ஆனால் அந்த திருச்சபை சொன்னமாதிரி செய்ய மாட்டோம். இந்த விசுவாசம் வேதாகமம் எங்கும் சொல்லப் படவில்லை, கீழ்ப்படியாத விசுவாசம்.

**சகோ. ஞானம்**
மலேசியா.

### யாக்கோபின் 12 குமாரர்களின் பெயர்களும் அர்த்தங்களும்

| | | |
|---|---|---|
| 1. ரூபன் | - | சிறுமை பார்க்கப்பட்டது |
| 2. சிமியோன் | - | கேட்கப்பட்டது |
| 3. லேவி | - | சேர்க்கப்பட்டது |
| 4. யூதா | - | புகழ்ச்சி |
| 5. தாண் | - | நியாயாதிபதி |
| 6. நப்தலி | - | மற்போர் (ரெஸ்லிங்) |
| 7. காத் | - | போர்படை அல்லது அதிர்ஷ்டம் |
| 8. ஆசேர் | - | மகிழ்ச்சி |
| 9. இசக்கார் | - | வாடகை |
| 10. செபுலோன் | - | குடியிருப்பு |
| 11. யோசேப்பு | - | அவன் சந்ததியை கூட்டுவான் |
| 12. பென்யமீன் (பெனோனி) | - | என்னுடைய வலது கரம் துயரத்தின் மகன் |

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/WO/ PP/5
Posted at Erode HPO on 20, **Aug 98**
**Aug 98** THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

**இயக்குநர்**
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
**த.பெ.எண். 27, காங்கயம்-638 701.**

Published by Church of Christ Kangayam and
Printed at Konar Printers, Madurai. Editor S.Rajanayagan

PRINTED MATTER BOOK-POST

To

From
THE EDITOR
THIRUMARAI AASAAN
Post Box No. 27,
KANGAYAM - 638 701.
Ph: 04257-20030